# DEPARTMENTAL EXAMINATIONS - MAY 2018

## 124 - The Account Test for Subordinate Officers - Part - I

## (Without Books)

(1) ஒதுக்கிய நிதிகள் அனைத்தும் தானாகவே எப்பொழுது காலாவதியாகிவிடும்

விடை: நிதியாண்டின் முடிவில்

(2) சம்பள முன்பணம் கேட்பு செய்ய எந்த படிவத்தில் பட்டியல் தயாரிக்கப்படவேண்டும்

விடை: த.நா.க.வி.தொ.படிவம் எண். 40

(3) மீளகொடுக்கப்படும் (Refund) கேட்பு பட்டியல் தயார் செய்யப்பட வேண்டிய படிவம்

விடை: த.நா.க.வி.தொ.படிவம் எண். 62

(4) விடுப்பு கால பயணச்சலுகைக்கு தகுதி பெற்ற அரசு அலுவலர் தமது தலைமையிடத்திலிருந்து மாநிலத்திற்குள் எவ்வளவு கிலோமீட்டர் தூரத்திற்கு பயணம் செய்ய வேண்டும்

விடை: 160 கி.மீ. க்கு மேல்

(5) கொடுபடா சம்பளப் பதிவேட்டில் எத்தனை காலத்திற்குள் வழங்கப்படாத எந்த தொகை இருப்பினும் அதனை அரசு கணக்கில் திரும்ப செலுத்தப்படவேண்டும்

விடை: 3 மாதங்கள்

(6) முதல் 10 ஆண்டுகள் வரை உயர்நிலை பணியில் உள்ளவர்களுக்கு சொந்த அலுவலுக்கான ஈட்டாவிடுப்பு எத்தனை நாட்கள் அனுமதிக்கலாம்

விடை: 90 நாட்கள்

(7) அனைத்து சார்பு செலவு சீட்டுகளும் அவை கொடுப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து எதுவரை தொடர்ந்து வைத்திருக்கப்பட வேண்டும்

விடை: 3 வருடங்கள்

(8) அரசு பணியாளருக்கு எத்தனை குழந்தை வரை மகப்பேறு விடுப்பு வழங்கப்படும்

விடை: 2

(9) சார்நிலை அலுவலகங்களுக்கான நிலையான முன்பணம் நிர்ணயித்து ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் யாரிடமுள்ளது?

விடை: துறை தலைமைக்கு

(10) நிலை முன்பணத்தை முதல் முறை (Initial) கேட்பு செய்து எடுப்பதற்கான படிவம்

விடை: த.நா.க.வி. தொ.படிவம் எண். 40

www.thamizhforest.com

(11) அலுவலர்சாரா உறுப்பினர் தாம் மேற்கொண்ட அலுவலக பயணத்திற்கான பயணப் பட்டியலை கேட்பு செய்வதற்கான கால வரையறை

விடை: பயணத்தின் கடைசி நாளிலிருந்து 1 வருடம்

(12) அரசு அலுவலர்களுக்கான மருத்துவ செலவினை மீளப்பெறுவதற்கான பட்டியலினை கேட்பு செய்வதற்கான கால வரையறை

விடை: மருந்துகள் வாங்கிய நாளிலிருந்து 3 மாதங்கள்

(13) காலங்கடந்த மருத்துவ செலவினம் மீள பெறும் கேட்புக்கு குறைக்கப்படும் சதவீதம்

விடை: 15 சதவீதம்

(14) தானே பணம் எடுக்கும் அலுவலர் தனது ஊதியப்பட்டியலினை தயார் செய்ய பயன்படுத்த வேண்டிய படிவம்

விடை: த.நா.க.வி.தொ.படிவம் எண். 42

(15) ஒரு அரசு ஊழியர் குறைந்த பட்சம் எத்தனை வருடங்கள் நிகர பணி காலம் பணி முடித்திருப்பின் விருப்ப ஓய்விற்கு விண்ணப்பிக்கலாம்

விடை: 20

(16) அடிப்படை பணி (Last Grade Service) அரசு அலுவலர் தொடர்பான ஊதியப்பட்டியல்கள் மற்றும் பற்றொப்பப்பட்டியல்கள் பாதுகாக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச காலம்

விடை: 45 ஆண்டுகள்

(17) 17 ஆண்டுகள் பணிமுடித்த உயர்நிலை பணி அரசு அலுவலர்களுக்கு அனுமதிக்கப்படும் அதிகபட்ச மருத்து சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பு

விடை: 360 நாட்கள்

(18) தற்செயல் விடுப்பு அல்லது அனுமதி அல்லது இரண்டும் சேர்த்து அதிகபட்சமான நாட்களாக அரசுப்பணியாளர் பயணத்தின் பொழுது அனுபவிக்கலாம்

விடை: 7 நாட்கள்

(19) இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் எந்த பிரிவு கூறின்படி ஆண்டு நிதிநிலை அறிக்கை சட்டப்பபேரவையின் இரு அவைகளிலும் ஒப்புதற்கு வைக்கப்படவேண்டும்

விடை: பிரிவுக்கூறு 202

(20) மதிப்பீட்டு குழு அமைக்கப்படுவது

விடை: சட்டப்பேரவையால்

(21) கடனுக்கான ஒப்பளிப்பு ஆணை காலாவதியாகும்

விடை: நிதியாண்டின் மார்ச் 31ம் நாள்

(22) தானே பணம் எடுக்கும் அதிகாரம் அல்லதத அலுவலர்களின் ஊதியப்பட்டியல் தயார் செய்யப்பட வேண்டிய படிவம்

விடை: த.நா.க.வி.தொ.படிவம் எண். 47

(23) பொது சேமநலநிதி முன்பணம், பகுதி முன்பணம் மற்றும் இறுதி எடுப்பு முதலான பட்டியல்களை எந்த படிவத்தில் தயார்செய்யப்பட வேண்டும்

விடை: த.நா.க.வி.தொ.படிவம் எண். 40-ஏ

(24) நிகர பணிக்காலத்தில் எது சேராது

விடை: மருத்துவ சான்றில்லாத சம்பளமில்லாத விடுப்பு

(25) தெரிவுநிலை பெற எத்தனை ஆண்டு பணிக்காலம் தேவை?

விடை: 10 ஆண்டுகள்

(26) புதிதாக துவங்கப்பட்ட அலுவலகத்திற்கான முதல் கொடுப்பு சம்பள கணக்கு அலுவலகம் அல்லது கருவூலங்களால் எது பெறப்பட்ட பின் வழங்க இயலும்

விடை: அரசிடமிருந்து விரைவு கொடுப்பாணை

(27) நிலை முன்பணத்தை அதிகபட்சம் மீட்சி செய்ய இயலும்

விடை: மாதம் இருமுறை

(28) சரிசட்டப்படாமல் நிலுவையில் வைக்க அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச தற்காலிக முன்பண எண்ணிக்கை

விடை: 2

(29) ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மறு பெயர்

விடை: வரவு செலவு திட்டம்

(30) இந்திய அரசியலமைப்பின் பிரிவுக்கூறு 267(2) எதைப் பற்றியது

விடை: இந்திய அரசின் எதிர்பாரா செலவின நிதி

(31) வாக்குரிமை செலவின கணக்கினை (Voted Expenditure) ஒப்புதல் அளிப்பது

விடை: சட்டப்பேரவை

(32) பணி வரலாறு எது தொடர்புடையது

விடை: தானே பணம் எடுக்கும் அலுவலர்

(33) மதிப்பீட்டு குழுவின் தலைவர் யாரால் நியமிக்கப்படுகிறார்

விடை: சபாநாயகர்

(34) பொதுக்கணக்கு குழு யாரால் அமைக்கப்படுகிறது?

விடை: சட்டப்பபேரவை

(35) அலுவலர்வழி சாரா உறுப்பினர்களை (ex-officio members) மதிப்பீட்டு குழு தலைவர் மற்றும் நிதியமைச்சருடன் கூடுதலாக பொதுக்கணக்குழு எத்தனை உறுப்பினர்களை கொண்டிருக்கும்

விடை: 16

(36) அலுவலக விரிவான வரவு செலவு திட்ட மதிப்பீடு தொடர்பான ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச காலம்

விடை: 5 ஆண்டுகள்

(37) உயர்கல்வி விடுப்பினை ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் பெற்ற அமைப்பு

விடை: அரசு

(38) தானே பணம் எடுக்கும் அலுவலர் தனது பயணப்படிக்கான கேட்பினை தயார் செய்ய பயன்படுத்த வேண்டிய படிவம்

விடை: த.நா.க.வி.தொ. படிவம் எண். 43

(39) எதிர்பாரா செலவு நிதியிலிருந்து எடுக்கப்படும் முன்பணம் கீழ்கண்ட தலைப்பிடப்பட வேண்டும்

விடை: பகுதி II எதிர்பாரா செலவு நிதி

(40) தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள ஒரு ஊழியர் பிழைப்பூதியம் இத்தொகைக்கு சமமாதனதாக பெற தகுதியுடையவராவர்

விடை: அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதம்